வக்பு சொத்துக்கள்.

*404 வினு திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) தற்போது தமிழகத்தில் உள்ள மொத்த வக்பு சொத்துக்களின் மதிப்பு என்ன ?

(இ) இதன் மூலம் வரும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ரூபாய் 11,17,81,587.

(இ) ரூபாய் 77,92,849.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான சொத்துக்கள் இருந்தும்-இன்னும் வழக்குமன்றத்திற்குச் சென்ருல் பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் வக்பு வாரியத்திற்கு வருவதாகத் தெரிகிறது. இப்போது பொருளாதார நெருக்கடியில் இந்த வாரியம் இருந்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே வருகின்ற வருமானத்தை உத்தேசித்து, இப்போது இந்த வாரியத்திற்கு இருக்கும் பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு கணிசமான தொகை பண உதவி செய்யுமா ? பொருளாதாரச் சிக்கல் இருப்பதால்தான் இந்த வக்பு வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு காலாகாலத்தில் சம்பளம் வழங்கமுடியாத நிலை இருப்பதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் பல ஊழியர்கள் ரெகுலரைஸ் பண்ணப்படாமலும் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, இந்தப் பொருளாதார நெருக்கடியை நீக்க அரசாங்கம் பண உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த வக்பு வாரியத்திற்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானம் கான்ட்ரிபியூஷனுக சுமார் 6 சதவிகிதம், அதாவது சுமார் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய். ஏற்கெனவே அரசாங்கம் 4 லட்சம் ரூபாய் அவர்களுக்கு கடன் வழங்கி இருப்பதாக நினைக்கிறேன். அதை அவர்களிஞல் திருப்பிச் செலுத்த முடியவில்லை. நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் சம்பளம் வழங்கு வதிலும் தாமதம் ஏற்படுகிறது என்று கருதுகிறேன். வக்பு வாரியத்தின் சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானத்தின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், அதைப் பெருக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் முயற்சி செய்தால் வருமானத்தைப் பெருக்க முடியும் ; அதன்மூலம் பல நல்ல காரியங்களைச் செய்யமுடியும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சுமார் 11 கோடி ரூபாய்க்கு சொத்து இருந்தும், குறைந்த வருமானமே வருவது மட்டு மல்லாமல் கடன் வேறு பட்டிருக்கிருர்கள். இதற்கு என்ன காரணம் ? வக்பு வாரியத்தில் குறைபாடு இருக்கிறதா ? குறைபாடுகளை எப்படி நீக்கப் போகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 13]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொன்னேன். சொத்தின் மதிப்பு சுமார் 11 கோடி ரூபாய். வருமானம் சுமார் 77 லட்சம் ரூபாய். ஆனல் வக்பு வாரியத்திற்கு 6 சதவிகிதம் காண்ட்ரிபூஷனுக வருகிற வருமானம் கிட்டத்தட்ட $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய்தான். அதை வைத்துத்தான் நிர்வாகம் நடத்தவேண்டும். வக்பு போர்டின் சொத்துக்களை சரியாக பராமரித்து வந்தால் வருமானத்தைப் பெருக்க முடியும். ஆகவே, அந்தச் சொத்துக்களைப் பராமரிக்கின்ற "முக்த அலி" களோடு தொடர்புகொண்டு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மதுரையிலுள்ள வக்பு வாரியத்தினல் நடத்தப்படுகின்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு முறையாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே, அந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்கப்போகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது ரொம்ப பழைய புகார். இப்போது ஒழுங்காக சம்பளம் கொடுக்கப்படுகிறது. வேண்டுமானல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட போய் பார்க்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார் இந்த வக்பு போர்டிலிருந்து வருகின்ற வருவாய் குறைவாக இருப்பதால் இந்த போர்டைச் சேர்ந்த பல கட்டடங்கள் பழுது பார்க்கப்படாமல், பராமரிப்பு இல்லாமல் இருக்கிறன. ஆகவே, பழுதடைந்த கட்டிடங்களை விற்றுவிட்டு, வேறு கட்டிக்கொள்ள அரசிடம் அனுமதி கேட்டிருக்கிருர்களா ? அதற்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சில சொத்துக்கள் பழையவைகளாக இருக்கின்றன. அவைகளிலிருந்து வருமானம் இல்லை. அப்படிப்பட்ட சொத்துக்களை விற்றுவிட்டு, வேறு நல்ல சொத்துக்களை வாங்கலாம் என்று முடிவு செய்து அதன்படி செய்திருக்கிருர்கள். அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அனுமதி அளிக்கவேண்டியது இந்த வக்பு போர்டே தவிர அரசாங்கம் அல்ல.

திரு. கே. எ. வகாப்: இப்போது இருக்கின்ற வக்பு போர்டினல் கடந்த 2, 3 ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக வருவாய் கூடி இருக்கிறதா அல்லது அவர்கள் முயற்சியிலும் தாமதம் இருக்கிறதா ? வருமானம் இல்லாமல் இருக்கின்ற பழைய சொத்துக்களை—வீடுகளை விற்றுவிட்டு, அதற்கு ஈடாக புதிய கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட்டால் அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அரசாங்கம் அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் முயற்சி எடுக்கப்பட்டது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, எல். ஐ. சி. மூலமாகக் கடன் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனல் எல். ஐ. சி. கடன் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டதால் இந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, மதுரையிலே ஒரு மாஸ்க் விஸ்தரிப்புக்காக வக்பு போர்டைச் சேர்ந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகை வக்பு போர்டுக்குச் சேருவதற்கு இன்னும் காலதாமதம் ஆகிறது. அந்தப் பணம் வக்பு போர்டு சபைக்கு வந்து சேர்ந்ததா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்தார்கள். அதனால் அவர்களுக்கே அந்த விபரம் நன்றாகத் தெரியும்.

திரு.மா.வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, வக்பு போர்டுக்குச் சொந்தமான இடங்களில் 20, 30 ஆண்டு காலமாக சாலைகள் பழுது பார்க்கப் படாமல் இருக்கின்றன. அந்தச் சாலைகளை நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்தால் செப்பனிட வாய்ப்பு இருக்கும். ஆகவே, நம்முடைய அரசாங்கம் பழுதடைந்த சாலைகளை நகரசபைகளிடமும், ஊராட்சி ஒன்றியங் களிடமும் வழங்க வக்பு போர்டுக்கு ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நகரசபைகளும், ஊராட்சி ஒன்றியங்களும் சம்பந்தப்பட்ட சாலைகளைப் பராமரிப்பதில் ஆட்சேபணை இருக்காது என்று கருதுகிறேன். இதுபோன்ற முயற்சிகளுக்கு வக்புபோர்டு சாதகமாகத்தான் இருக்கும்.

Sale of vegetables, etc., through Co-operatives in Madras.

* 405 *Q.*— THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Nilgiris Co-operative Marketing Society Limited has undertaken the wholesale supply of vegetables to the Super markets in Madras City ; and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) : உதக மண்டலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பயிராகும் காய்கறிகளை 16—6—1973 முதல் 12—7—1973 வரையில் சென்னை மாநகரிலுள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T. U. C. S.), காமதேனு சிறப்பங்காடி ஆகியவற்றின் மூலம் வழங்கும் பொறுப்பை நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேற்கொண்டது. காய்கறிகளைக் கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், சென்னையில் விற்பனை செய்தல் ஆகிய வகைகளில் இச்சங்கத்திற்குப் பல இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தால், இச்சங்கம் காய்கறி விற்பனையை 12—7—1973 முதற்கொண்டு நிறுத்தி விட்டது. சென்னையிலுள்ள இச்சங்கத்தின் கிளை, முதற்கண் உருளைக் கிழங்கு, முள்ளங்கி, முட்டைக்கோஸ் ஆகியவற்றின் விற்பனையுடன் 1—1—1974 முதற்கொண்டு தன் வணிகத்தைத் தொடங்கியுள்ளது. மாற்றியமைக்